ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2356- 2023 ඔක්තෝබර් මස 27 වැනි සිකුරාදා - 2023.10.27
*2356 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 282 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


## வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது *2023*, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, நவெம்பர் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

281 - B 082508- 353 (2023/10)

# நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பில் நடாத்தப்படும் (சிவில் நீதிமன்ற அதிகாரத்தை செயல்படுத்தும்) மேல் மாகாண வணிக உயர் நீதிமன்றில்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சட்டத்தின் 270(அ) எனும் உப உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய 272(1) ஆம் உறுப்புரையின் கீழ் நீதிமன்றினால் கணக்கை நிறைவு செய்வதற்கான கோரிக்கை தொடர்பான காரணத்தினால்.*

வழக்கு இல. CHC/ 41/2023/CO
தன்மை: நிறுவனங்கள் நடைமுறை பதிவு

ஹிடிஹாமில்லாகே ஷ்யாமி ப்ரியந்த அதிராஜ,
இல. 394/1, எகமுது மாவத்தை, தலங்கம வடக்கு, பத்தரமுல்ல.

மனுதாரர்

எதிர்

ஏ பேஸ் மெச் பாமசி (ப்ரைவட்) லிமிட்டட்
(A BASE MECHFARMS (PRIVATE) LIMLTED)
இல. 62, பிரதான வீதி, பத்தரமுல்ல.

பதிலளிப்பார்

*மேற்குறிப்பிட்ட நிறுவனத்தை கலைப்பதற்கு 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதியிட்ட மனுவானது கொழும்பில் நடைபெறும். மேல் மாகாண உயர் நீதிமன்றில் மேற்குறிப்பிட்ட மனுதாரர் சார்பாக ரொஸ்மிட் லோ செம்பர்ஸ் சட்டத்தரணி சங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 03 ஆந் திகதி நீதிமன்றில் விசாரணை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக அந்நிறுவனத்தின் கடன்பெறுநர் அல்லது பங்களிப்பாளர் அல்லது அம் மனுவில் வெளிப்படுத்தப்படும் கட்டளைகள் வழங்குகையில் அக்கோரிக்கைக்கு விருப்பாகவோ அல்லது எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கு விருப்பமாயின், அத்தகைய கடன் பெறுநர் அல்லது பங்களிப்பாளரினால் தனிப்பட்ட முறையிலோ அல்லது சட்டத்தரணி ஊடாக அதில் பிரசன்னமாக வேண்டும் என்பதுடன் அச்சங்கத்தின் எவரேனும் கடன்பெறுநர் அல்லது பங்களிப்பாளருக்கு மனுப் பிரதிகளை கட்டணங்களை செலுத்தியதன் பின்னர் கீழ்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.*

*ரொஸ்மிட் லோ செம்பர்ஸ்,
மனுதாரரின் சட்டத்தரணி,
இல.18, ரொஸ்மிட் இடம்,
கொழும்பு 07.*

***குறிப்பு**:எவரேனும் ஒருவர் அம்மனு தொடர்பான விசாரணையின் பிரசன்னமாக கருதுவாராயின், அதனை சட்டத்தரணி சங்கத்திற்கு எழுத்து மூல அறிவித்தலாக கையளித்தல் அல்லது தபால் ஊடாக தெரியப்படுத்த வேண்டும் என்பதுடன், அவ் அறிவித்தலில் எவரேனும் ஒரு நபராயின் பெயர் மற்றும் முகவரியினையும் நிறுவனமாயின் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியையும் குறிப்பிட்டு நபரினால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவாரது சட்டத்தரணியினால் (இருப்பின்) கையெழுத்திட்டு ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் தபால் மூலமாக அனுப்புவதாயின் உரிய காலப்பகுதியினுள் 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு முதல் மேற்குறிப்பிட்ட சட்டத்தரணிகள் நிறுவனத்திற்கு ஒப்படைக்குமாறு அறியத்தருகின்றோம்.*

*10- 459*

## வெல்லவத்த வை எம் பீ ஏ சொஸயிட்டியை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

மதுர விதானகே ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "வெல்லவத்த வை எம் பீ ஏ சொஸயிட்டியை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்:

(அ) புத்த தர்மத்தை நிலைநாட்டுதல், அதன் போதனை மற்றும் வளர்ச்சிக்காக வசதிகளை ஏற்பாடு செய்தல்;

(ஆ) புத்த தர்மத்தைப் பின்பற்ற ஊக்கமூட்டுதல் ; மற்றும்

(இ) பௌத்த மக்கள் மத்தியில் ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தல்;

பிறவும் .

மதுர விதானகே ,
பாராளுமன்ற உறுப்பினர்.

10- 378

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.